செ. கு. எண்: 106 நாள் :07.06.2014

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 7.6.2014

27.2.2014 அன்று கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், வில்லுக்குறி அருகே இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த நாகர்கோயில் ஆயுதப்படை பிரிவில் தமிழ்நாடு சிறப்பு இளைஞர் காவல்படையில் காவலராகப் பணி புரிந்து வந்தவரும், குலசேகரம் கிராமம், பனவிளை, செர்த்திகோணம் பகுதியைச் சேர்ந்த, திரு. குணசுந்தர் என்பவரின் மகனுமாகிய அஸ்வின்;

7.3.2014 அன்று ஈரோடு மாவட்டம், பெருந்துறை கிராமம், ஈங்கூர் அருகே இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த பெருந்துறை கிராமத்தைச் சேர்ந்த திரு. வெங்கடாசலமூர்த்தி என்பவரின் மகள் ப்ரீத்தா;

19.3.2014 அன்று விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், சிந்தாமணி பேருந்து நிறுத்தம் அருகே சென்று கொண்டிருந்த சிந்தாமணி கிராமத்தைச் சேர்ந்த திரு. கோபால் என்பவரின் மகன் லோகநாதன்;

24.3.2014 அன்று திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் கிராமம், திருநெல்வேலி – மதுரை நெடுஞ்சாலையில் சாலையைக் கடக்க முயன்ற கோவில்பட்டி வட்டம், பசுவந்தனை, தெற்கு பொம்மையாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுக பாண்டியன் என்பவரின் மகன் ஆறுமுகராஜா;

25.3.2014 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், பழைய மகாபலிபுரம் சாலை அருகே நின்று கொண்டிருந்த ஒக்கியம் - துரைப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. எட்டியப்பன் என்பவரின் மகன் பழனிகுமார்;

29.3.2014 அன்று விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், திருச்சிற்றம்பலம் மதுரா மொரட்டாண்டி பேருந்து நிறுத்தம் அருகே நின்று கொண்டிருந்த திரு கணபதி என்பவரின் மகன் நாராயணசாமி;

-- ஆகியோர் அரசுப் பேருந்துகள் மோதியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

23.3.2014 அன்று விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், சிறுவங்கூர் கிராமம் அருகே சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து நிலை தடுமாறி சாலையோர புளிய மரத்தின் மீது மோதியதில் பேருந்தில் பயணம் செய்த வீரசோழபுரத்தைச் சேர்ந்த திரு. குப்புசாமி என்பவரின் மகன் மணி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

23.3.2014 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், பாலூர் 'இ' கிராமம் அருகில் காஞ்சிபுரம் நெடுஞ்சாலையில் சாலையை கடக்க முயன்ற செங்கல்பட்டு வட்டம், அன்னை தெரசா காலனியைச் சேர்ந்த திரு. கோபால் என்பவரின் மனைவி தனம்மாள் மீது ஜீப் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

28.3.2014 அன்று புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம். நார்த்தாமலை கிராமம், புதுக்கோட்டை - திருச்சி நெடுஞ்சாலையில் சாலையை கடக்க முயன்ற கறம்பக்குடி ஊராட்சியைச் சேர்ந்த திரு. அருங்குளலிங்கம் என்பவரின் மகன் உதயகுமார் அரசுப் பேருந்து மோதியதில், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 3.4.2014 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

29.3.2014 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலிருந்து கேரளா மாநிலம், சாலக்குடி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து அம்பலப்பாறை என்ற இடத்தில் நிலை தடுமாறி பள்ளத்தில் விழுந்ததில் பேருந்தில் பயணம் செய்த வால்பாறையைச் சேர்ந்த திரு. வேல்முருகன் என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**